*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 2, issue 1, pp. 352- 356, Oct.-2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# நடுகற்களில் சைவச் சமய வழிபாட்டுத் தாக்கங்கள் - பொ.ஆ. ஏழாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை

**விக்னேஷ் சீனிவாசன்**

**முனைவர் பட்ட ஆய்வு மாணவர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை**, எழும்பூர், சென்னை 08

**ஆய்வுச் சுருக்கம்**

பெருங்கற்காலம் எனப் பண்டைய வரலாற்றில் வழங்கப்படக் கூடிய இரும்புக் காலந்தொட்டே இறந்தோருக்கு நினைவுக் கற்கள் எடுக்கும் வழக்கம் உலகம் முழுமையும் இருந்துள்ளதை கற்பதுக்கை, கற்திட்டை, கல்வட்டம் போன்ற தொல்லியல் சின்னங்கள் நமக்கு பறைசாற்றுகின்றன. இவையாவும் இறந்தவரின் ஆன்மா குறித்த பண்டைய மக்களின் நம்பிக்கை சார்ந்து அமைக்கப்பட்டது என்பார் வானமாமலை. அதன் தொடர்ச்சியாகவே தொல்காப்பியம் நடுகல் எடுக்கும் முறைகள் குறித்து மிக விரிவாக கூறுகின்றது. அதனையொட்டி சங்க காலத்தில் ஆநிரை பூசலில் இறந்துப்பட்ட வீரர்களுக்கு நடுகல் எடுத்து வழிபடப்பட்டதாக அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு உள்ளிட்ட சங்கப் பாடல்கள் பதிவு செய்கின்றன. 'நடுகல்லே தெய்வம்' என்றும் 'வேறு தெய்வங்கள் இல்லை' என்றும் கூறும் அளவிற்கு நடுகல் வழிபாடு சங்கக் காலத்தில் மிக பரவலாக மக்கள் வழிபாட்டில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. ஆனால் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் தாக்கங்களால் மக்கள் மரபில் எடுக்கப்பட்ட நடுகற்களில் சைவ சமய வழிபாட்டு குறியீடுகள் வெளிப்படுகின்றன. இந்த நடுகற்கள் யாவும் சமயத்தை காக்கவோ, பரப்பவோ நடந்த பூசல்கள் இல்லை. ஆநிரை மீட்டல் கவர்தல் முதலான பூசல்களில் இறந்துபட்ட வீரர்களுக்காக எடுக்கப்பட்டவை தான். அவற்றில் இறந்த வீரனின் சமய நம்பிக்கை வெளிப்படும் விதமாக சமயக்குறியீடுகள் நமக்கு கிடைக்கின்றன. பல்லவர் கால நடுகற்கள் திருவண்ணாமலை, செங்கம் பகுதிகளில் அதிகமாக காணப்படுகிறது. பின்னர் கங்கர் கால நடுகற்களில் இறந்த வீரர்கள் சிவலோகம் செல்வது போலும், அங்கு சிவனடி சேர்ந்து பூசனைகள் செய்வது போன்றும் காட்டப்படுகிறது. இதே நம்பிக்கைகள் நுளம்பர் , இராஷ்ட்ரகூடர் நினைவுக் கற்களிலும், பின்னர் ஒய்சாளர்கள், விஜயநகர நாயக்க மன்னர்கள் காலத்திய நினைவுக் கற்களிலும் தொடர்வதைக் காணமுடிகிறது. இவற்றில் பொதுவாக சைவக் குறியீடுகள் இருந்தாலும் சில நடுகற்கள் மூலம் சைவ சமயத்தின் பல்வேறு வழிபாட்டு மரபுகளின் தாக்கங்கள் இருந்துள்ளதை அறியமுடிகிறது. அவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குறிச் சொற்கள்:** கத்வாங்கம் – கட்டங்கம், வீரக்கல் - நடுகல், கொற்றவாசி – கொற்றவாயில், சைவம் – சிவ சின்னம், மேலோர் உலகம் – சொர்க்கம், சதி – உடன்கட்டை.

**முன்னுரை:**

பெருங்கற்காலம் எனப் பண்டைய வரலாற்றில் வழங்கப்படக் கூடிய இரும்புக் காலந்தொட்டே இறந்தோருக்கு நினைவுக் கற்கள் எடுக்கும் வழக்கம் உலகம் முழுமையும் இருந்துள்ளதை[1] கற்பதுக்கை, கற்திட்டை, கல்வட்டம் போன்ற தொல்லியல் சின்னங்கள் நமக்கு பறைசாற்றுகின்றன. இவையாவும் இறந்தவரின் ஆன்மா குறித்த பண்டைய மக்களின் நம்பிக்கை சார்ந்து அமைக்கப்பட்டது என்பார்



*©2023 by* KRISHMA PUBLICATION

வானமாமலை[2]. அதன் தொடர்ச்சியாகவே தொல்காப்பியம்[2] நடுகல் எடுக்கும் முறைகள் குறித்து மிக விரிவாக கூறுகின்றது. அதனையொட்டி சங்க காலத்தில் ஆநிரை பூசலில் இறந்துப்பட்ட வீரர்களுக்கு நடுகல் எடுத்து வழிபடப்பட்டதாக அகநானூறு[1] புறநானூறு[1] ஐங்குறுநூறு[1] உள்ளிட்ட சங்கப் பாடல்கள் பதிவு செய்கின்றன. 'நடுகல்லே தெய்வம்[1] என்றும் ' நெல் உகுத்து வழிபடும் வேறு தெய்வங்கள் இல்லை' என்றும் கூறும் அளவிற்கு நடுகல் வழிபாடு சங்கக் காலத்தில் மிகப் பரவலாக மக்கள் வழிபாட்டில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. ஆனால் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் தாக்கங்களால் மக்கள் மரபில் எடுக்கப்பட்ட நடுகற்களில் சைவ சமய வழிபாட்டு குறியீடுகள் வெளிப்படுகின்றன. இந்த நடுகற்கள் யாவும் சமயத்தை காக்கவோ, பரப்பவோ நடந்தப் பூசல்கள் இல்லை. ஆநிரை மீட்டல் கவர்தல் முதலான பூசல்களில் இறந்துபட்ட வீரர்களுக்காக எடுக்கப்பட்டவை தான். அவற்றில் இறந்த வீரனின் சமய நம்பிக்கை வெளிப்படும் விதமாக சமயக்குறியீடுகள் நமக்கு கிடைக்கின்றன. பல்லவர் கால நடுகற்கள் திருவண்ணாமலை, செங்கம் பகுதிகளில் அதிகமாக காணப்படுகிறது[1] பின்னர் கங்கர் கால நடுகற்களில் இறந்த வீரர்கள் சிவலோகம் செல்வது போலும், அங்கு சிவனடி சேர்ந்து பூசனைகள் செய்வது போன்றும் காட்டப்படுகிறது. இதே நம்பிக்கைகள் நுளம்பர் , இராஷ்ட்ரகூடர் நினைவுக் கற்களிலும், பின்னர் ஒய்சாளர்கள், விஜயநகர நாயக்க மன்னர்கள் காலத்திய நினைவுக் கற்களிலும் தொடர்வதைக் காணமுடிகிறது. இவற்றில் பொதுவாக சைவக் குறியீடுகள் இருந்தாலும் சில நடுகற்கள் மூலம் சைவ சமயத்தின் பல்வேறு வழிபாட்டு மரபுகளின் தாக்கங்கள் இருந்துள்ளதை அறியமுடிகிறது. அவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பல்லவர் கால நடுகற்களில் சைவத் தாக்கம்:**

திருவண்ணாமலை மாவட்டம் கருங்காலிப்பாடிபட்டி என இன்று வழங்கிவரும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட முதலாம் மகேந்திரவர்மனின் பதினாலாவது ஆட்சியாண்டு (பொ.ஆ,604) நடுகல் கல்வெட்டு (113/1971) ஒன்றில் வீரனின் காலுக்கு அருகில் சிவலிங்கம் போன்ற அமைப்பும் கள் குடுவையும் காணப்படுகிறது. 'கல்லே பரவினல்லது' எனச் சங்க இலக்கியம் போற்றும் தனித்த நடுகல் மரபானது பல்லவர் கால பக்தி இயக்கத்தின் தாக்கங்களால் சைவ சமய வழிபாட்டு நம்பிக்கைகளினூடாக முதல்படியை எடுத்து வைத்திருக்கிறது எனலாம். இக்கல்வெட்டில் வரும் வீரனின் பெயர் *'கொற்றவாசிற் கருசாத்தனாரு மகன் கட்டங்கன்னாரு[2]* என்பது இங்கு கவனிக்கத்தக்கது. 'கொற்றவாசி' என்பதைக் 'கொற்றவாயில்' என்று கொள்ளலாம். கொற்றவாயில் என்பது கோவில் வாயிலைக் குறிக்கும் சொல்லாகும். *'கத்வாங்கம்'* என்பது தமிழில் கட்டங்கம் என வழங்கப்படுகிறது. அக்கட்டங்கத்தில் மனித தொடை எலும்பு, மனித மண்டை ஓடு, பாம்பு ஆகிய மூன்றும் காணப்படும். மனித தொடை எலும்பு தண்டுப் பகுதியாகவும், அதன் மேல் பகுதியில் மனித மண்டை ஓடும் பொருத்தப்பட்டிருக்கும். தண்டுப் பகுதியை சுற்றி கொண்டு மண்டை ஓட்டின் ஒரு கண் துவாரத்தின் வழியாக பாம்பு தன் தலையை நீட்டிக் கொண்டிருக்கும். இது சிவபெருமான் தனது திருக்கரங்களில் ஏந்திய ஆயுதங்களில் ஒன்றாகும் என்பதால் அவருக்கு கட்டங்கம் என்னும் மழுவாயுதம் கொண்ட *'கட்டங்கன்'* என்ற சிறப்புப் பெயருண்டு. திருச்சி மாவட்டம், இலால்குடி (திருத்தவத்துறை) சப்தரிஷீஸ்வரர் திருக்கோவில், காஞ்சி ஏகாம்பர நாதர் திருக்கோவில், வாலீஸ்வரர் திருக்கோவில் ஆகியவற்றில் இந்தக் கட்டங்க ஆயுதத்துடன் சிவ வடிவங்களைக் காணலாம்.

கட்டங்கத்தைச் சிவனடியார்கள் ஞானத்தின் சின்னமாகவும், சைவ சமயத்தின் அடையாளமாகவும் கூறுவர். சைவ சமயத்தின் ஒரு பிரிவான காபாலிகச் சமயத்தைப் பின்பற்றுபவர்கள் அதைக் கையில் வைத்திருப்பதுண்டு. *'கட்டங்கம் ஏந்திய கையி னானை[1]* என்பது திருநாவுக்கரசர் வாக்காகும். இரண்டாம் திருமுறையில் *'கறையார் மணிமிடற்றான் காபாலி கட்டங்கன்[1]* எனவும் கூறுகின்றன. இராசசிம்ம பல்லவனின் தந்தை பரமேஸ்வர பல்லவன் தன்னை கபாலிகனாக அறிவித்துக்கொண்டான். அவன் *'கத்வாங்க'* கொடியை வைத்திருந்ததாக காசாக்குடி பட்டயத்தில்[1] கூறுகிறான். வைகுந்த பெருமான் கோவில் கல்வெட்டு சாசனம்[1] பல்லவ மன்னன் 2-ஆம் நந்திவர்மனுடைய முடிசூட்டு விழாவின் போது அவருக்கு செங்கோலுடன் கத்வாங்கம் முதலியன அளிக்கப்பட்டதாகக் கூறுகிறது. அதோடு மட்டுமல்லாமல், இக்கல்வெட்டின் சமகாலத்தில் முதலாம் மகேந்திர பல்லவனால் எழுதப்பட்ட நாடக நூலான *மத்தவிலாச பிரஹசனம்[1]* அளிக்கும் கபாலிகர்கள் குறித்த செய்திகளை ஆராயுங்கால், தொண்டை மண்டலத்தில் அவர்களின் தாக்கம் எத்தகையது என்பதை வெளிச்சமிட்டு காட்டுகிறது. அரசர்கள் மட்டுமல்லாது மக்கள் மரபிலும் கபாலிக சைவத் தாக்கம் இருந்திருப்பதற்கு கருங்காலிப்பாடிபட்டி நடுகல் வீரனும், அதில் அடங்கியுள்ள சிவலிங்கமும் கள் குடுவையும் சான்றாக அமைகின்றன. இதுமட்டுமின்றி பல்லவர் காலத்தில் கிடைக்கப்பெற்ற மல்லிகாபுரம் நடுகல் கல்வெட்டிலும் சிவச் சின்னங்கள் வீரனின் காலுக்கு கீழாக காணப்படுகின்றன. இக்கல்வெட்டில் வரும் வீரனின் பெயர் *"வத்தாவன் மகன் நந்தி[1]* எனக் குறிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. இக்கல்வெட்டும் மகேந்திர பல்லவனின் (பொ.ஆ,629) காலத்தியதே. மேலும் தர்மபுரி மாவட்டம் லலிகம், திருவண்ணாமலை மாவட்டம் மேல் புஞ்சை, போந்தை, தாழையூத்து உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கிடைக்கப்பெற்ற பொ.ஆ. 7,8,9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் கால நடுகற்களில்[1] வீரனின் உருவத்திற்கு கீழாக சிவச் சின்னங்கள் காணப்படுவதை அறியலாம்.

**நுளம்பர், இராஷ்ட்ரகூடர் நடுகற்களில் சைவத் தாக்கம**

பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டிற்கு பிறகு மக்கள் மரபில் சொர்க்கம், சிவலோகம், மேலோர் உலகம் குறித்த நம்பிக்கைகள் அதிகரித்து இருப்பதாக தெரிகிறது. எனவே, நடுகற்கள் இரண்டு அல்லது மூன்றடுக்கு நிலையில் காட்டப்படுகின்றன. முதல் அடுக்கில் வீரன் சண்டையிட்டு இறப்பது போன்றும், இரண்டாம் அடுக்கில் தேவதைகள் இறந்த வீரனது உயிரை தூக்கிச் செல்வது போன்றும், மேல் அடுக்கில் இறைவனடி சேர்ந்தது போன்றும் காட்டப்படும் வழக்கம் பொ.ஆ.9 ஆம் நூற்றாண்டிற்கு பிறகான நடுகற்களில் காண முடிகிறது. இராஷ்ட்ரகூட அரசன் கன்னரதேவனின் 24வது ஆட்சியாண்டில் (பொ.ஆ.963) செங்கல்பட்டு அருகே ஒரத்தி எனும் ஊரில் கிடைத்த தூங்குதலை நடுகல்[2] சற்று வித்தியாசமானது. கன்னரதேவனின் யானைப்படை அதிகாரியான கங்கயன் என்பவர் ஏரி பழுதுபார்த்தல் எவ்விதத் தடையுமின்றி நடைபெற வேண்டும் என்பதற்காக தனது தலையை சிவனுக்குக் காணிக்கையாக அளித்த செய்தியைத் தருகிறது. இறந்த வீரன் மேலோர் உலகம் புகுந்து இறைவனடி சேர்ந்து வணங்குவது போன்று சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. பொதுவாகவே பொ.ஆ. 12,13 ஆம் நூற்றாண்டிற்கு பிறகு அரிகண்டம் கொடுக்கும் வழக்கம் கன்னட வீர சைவ மரபிலும் தமிழக வீர சைவ மரபிலும் பரவலாக காணப்படுகிறது. தமிழகத்தில் கிடைத்துள்ள பெரும்பாலான அரிகண்ட நடுகற்கள் வீர சைவ மரபினரோடு நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது. அவ்வகையில் வீர சைவ மரபின் தோற்றுவாயாக இருந்த காளாமுக சைவர்கள் தமது உறுப்புக்களை இறைவனுக்கு காணிக்கையாக செலுத்துவதை பின்பற்றியுள்ளனர் என கன்னட கல்வெட்டுகளில் இருந்து அறிய முடிகிறது.[2] செங்கல்பட்டு மாவட்டம் திருவாணைக்கோயில் கல்வெட்டில் காளாமுக துறவியான சைலாராசி பண்டிதர், ஞானாராசிப் பண்டிதர் போன்றோர் குறிப்பிடப்படுகிறார்கள்[1]. தமிழ்நாட்டில் திருவாணைக்கோயில், வேடல் உள்ளிட்ட வட ஆற்காடு பகுதியில் காளாமுக வழிபாட்டு தலங்கள் இருந்திருப்பதை டேவிட் லோரன்ஸன் தனது நூலில்[1] குறிப்பிடுகிறார். இதனோடு தொடர்புபடுத்தி ஆராய்ந்தால் ஒரத்தி தூங்குதலை நடுகல் ஒரு காளாமுக அதிகாரியின் காணிக்கையாக இருக்குமோ என தோன்றுகிறது.

ஏறத்தாழ இதே நூற்றாண்டில் தர்மபுரி மாவட்டம் பொம்மிடியில் கிடைத்த நுளம்பர் கால பழங்கன்னட தூங்குதலை நடுகல்[1] ஒன்றிலும் வீரன் மேலோர் உலகம் செல்வதாக காட்டப்பட்டுள்ளது. பொதுவாகவே ஆநிரை பூசலில் இறந்துப்பட்ட வீரர்கள், ஊரைக் காக்கும் பொருட்டு விலங்குகளுடன் சண்டையிட்டு இறந்த வீரர்கள், சதியில் இறந்த பெண்கள் உள்ளிட்டவர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்களில் சைவ / வைணவ சமய அடையாளங்களும், ஐயனார்/ சாத்தன் சின்னங்களும், சமண அடையாளங்களும் காணப்படுகின்றன. ஆனால் பொது நலன்களுக்காக தன்னைத்தானே பலி கொடுத்துக்கொள்ளும் மரபு சைவத்தை தவிர்த்து ஏனைய சமயங்களில் இருத்திருப்பதற்கான சான்றுகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. அதிலும் குறிப்பாக காளாமுக, வீரசைவ வழிபாட்டு முறைகளில் இத்தகைய போக்குகள் காணப்படுகின்றன. முனைவர் கேசவராஜ் அவர்களின் நூலில்[3] வீரசைவ தாக்கங்களால் நடுகற்களில் ருத்திராட்ச மாலை, சிவலிங்கம் போன்ற அமைப்புகள், கேரள மாநிலம் புலப்பள்ளி நடுகல் தொடங்கி, கர்நாடக, ஆந்திர பகுதிகளில் கிடைத்த பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டிற்கு பிந்தைய நடுகற்கள் வரை எவ்வாறு அம்மரபு தொடர்ந்திருக்கிறது என்பதை விவாதிக்கிறார்.

**சதிக்கற்களில் சைவத் தாக்கம்:**

அரச மரபில் பெண்கள் தீப்பாயும் செய்தியும் சைவ சமயத் தொடர்பிலேயே இதுகாறும் கிடைத்துள்ளன. இராஜராஜ சோழனின் தாயார் உடன்கட்டை ஏறிய செய்தி திருக்கோவிலூர் கல்வெட்டிலும், இராஜேந்திர சோழனின் மனைவியார் தீப்பாய்ந்த செய்தி பிரம்மதேசம் கல்வெட்டிலும் காணப்படுகின்றன என்றாலும் மக்கள் மரபில் சதிக்கற்கள் பெரும்பாலும் பொ.ஆ.13 ஆம் நூற்றாண்டிற்கு பிறகே தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறுகிறது. ஆனால் கர்நாடக மாநிலத்தின் மைசூர் அருகே குந்தன் பெலத்தூரில் கிடைத்த ஒரு சதிக்கல்[2] ஐந்து அடுக்காக அமைந்துள்ளது. அவற்றில் முதல் அடுக்கில் பெண் சதியேற மேளதாளத்துடன் பல்லக்கில் அழைத்து வருவதும், இரண்டாம் அடுக்கில் சதியேறுவது போன்றும், மூன்றாம் அடுக்கில் மேளதாளத்துடன் தேவதைகளுடன் மேலோர் உலகம் அழைத்து செல்வது போன்றும், நான்காம் அடுக்கில் பிரம்மனும் திருமாலும் அவளை நீராட்டுவது போன்றும், ஐந்தாம் அடுக்கில் சிவன், உமை, முருகன், விநாயகரை வணங்கி இறைவனடி சேர்ந்தது போன்றும் காட்டப்படுகிறது. இந்த சதிக்கல் பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டை சேர்ந்ததாக தெரிகிறது.

கொங்கு மண்டலத்தில் கிடைத்துள்ள பெரும்பாலான சதிக்கல், விலங்கு சதிக்கற்களில் சிவச் சின்னங்கள் காணப்படுகின்றன. தெங்குமரஹடா பகுதியில் கிடைத்த பொ.ஆ. 15 ஆம் நூற்றாண்டை சேர்ந்த புலிக்குத்தி சதிக்கல் ஒன்று மூன்றடுக்கில் கிடைத்துள்ளது. இதில் புலியுடன் சண்டையிட்டு இறந்த வீரனும் அவனது துணைவியும் மேலோர் உலகம் சென்று அங்கு சிவலிங்கத்தை பூசிப்பது போன்று காட்டப்பட்டுள்ளது. அதேபோன்று பொ.ஆ. 16 ஆம் நூற்றாண்டை சேர்ந்த ஆனைமலையில் கிடைத்த யானைக்குத்திபட்டான் நடுகல்லில்[2] இறந்த வீரனுடன் உடன்கட்டை ஏறிய அவனது மனைவியும் காட்டப்படுகிறார்கள். அவர்களின் தலைக்கு மேலே சிவலிங்கமும் அமர்ந்த நிலையில் நந்தியும் காட்டப்பட்டுள்ளது.

**பிற்கால நடுகற்களில் சைவத் தாக்கம்**

பொ.ஆ.13 ஆம் நூற்றாண்டில் கர்நாடக மாநிலம் மாண்டியாவில் கிடைத்த ஒய்சாளர் நடுகல்[3] ஒன்று விசித்திரமான செய்தியை அளிக்கிறது. வீரபல்லாளனின் காலத்தில் அவனது நிர்வாகத்தில் அங்கம் வகித்த மசனய்யா என்பவர் போரில் படுகாயம் அடைந்து உயிருக்கு போராடிய நிலையில், அவரது அன்பு மனைவியும் அவரது பிரிவை தாளமுடியாது வருந்தியதால் மசனய்யா தனது வாளால் மனைவியை குத்திக் கொன்றுவிட்டு தானும் இறந்த செய்தியை அளிக்கிறது. இந்நடுகல் மூன்று நிலைகளில் காட்டப்பட்டுள்ளது. முதல் நிலையில் மசனய்யா தனது மனைவியை வாளால் குத்துவதும் பின்னர் இருவரும் சிவலோகம் செல்வதும், சிவனடி சேர்வதும் காட்டப்பட்டுள்ளது. இது வீரசைவ மரபில் எடுக்கப்பட்ட நடுகல் என அனுமானிக்க முடிகிறது.

பெண்களும் வீரச்சாவு அடைந்திருக்கிறார்கள் எனும் செய்தியை கர்நாடக மாநிலத்தின் சிகாரிபுரா நடுகல் ஒன்று பறைசாற்றுகின்றது[4] பொ.ஆ.1446 ஐ சார்ந்த இந்த நடுகல்லானது ஹரியக்கா எனும் வீரமங்கையின் நினைவாக எடுக்கப்பட்டுள்ளது. தன் தந்தையை கொன்றவர்களை பழிவாங்கும் நோக்கோடு ஆண்களுடன் போரிட்டு வீரச்சாவு எய்திய ஹரியக்கா பின்னர் இறைவனடி சேர்ந்தது போன்று மேலோர் உலகத்தில் சிவலிங்கமும் நந்தியும் காட்டப்பட்டிருப்பதைக் கொண்டு அறியமுடிகிறது.

பொ.ஆ. 15 ஆம் நூற்றாண்டிற்கு பின்னர் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்ட பகுதிகளில் குடியேறிய கம்பளத்து நாயக்கர் சமூகத்தினரின் பண்பாட்டு மரபாக தொடரும் மாலக்கோவில் எனும் நடுகல் மரபிலும் பெரும்பாலும் காமதேனு லிங்கத்தினை பூசிப்பது போன்று காட்டப்படுகின்றன. இவ்வகை நடுகல்லில் குறைந்தது 5-6 தலைமுறையினரின் வீரச்சாவு காட்டப்படுகிறது. தேனி மாவட்டத்தில் மாலையம்மன் நினைவுத்தூண், செங்குலம் நினைவுத்தூண்[4] போன்றவை மாலக்கோவில் நடுகல் மரபிற்கு எடுத்துக்காட்டாக அமையும். மகாராஷ்டிர மாநிலம் கிகாலியில் கிடைக்கப்பட்ட பல நடுகற்களில் சிவலிங்கமும் நந்தியும் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது[2]

**முடிவுரை**:

இரும்புக் காலம் தொட்டு ஆன்மாவின் நிலையில்லா தன்மை குறித்தும் உடல், உயிர், மறுபிறப்பு குறித்த சந்தேகங்கள் மனிதனுக்கு ஏற்பட்டு வந்ததையடுத்து, உயிரானது மேலோர் உலகம் புகுந்து சிவானுபவத்தைப் பெற்று இன்புறும் என்றும், முக்திக்கான எளிமையான வழிகளை பக்தி இயக்கம் ஏற்படுத்தியதை நடுகற்கள் பிரதிபலிக்கின்றன என்பதாகவே புரிந்துக்கொள்ள முடிகிறது. மேலும் ஒட்டுமொத்தமாக தென்னிந்திய நடுகற்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் பெரும்பாலான நடுகற்களில் சிவ சின்னங்களை காணமுடிகிறது என்பதால் சிவலோகம் செல்வதும் சிவனடி சேர்வதும் சைவத் திருமுறைகளினூடாகவும் நாயன்மார் புராணங்கள் மூலமாகவும் பொ.ஆ. 12 ஆம் நூற்றாண்டிற்கு பின்னர் தமிழ்நாடு, கர்நாடக பகுதிகளில் பிரபலமானதால் இயல்பாகவே அதன் தாக்கங்கள் நடுகற்களில் அமைந்திருக்கின்றன. எனவே, பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு தொடங்கி பொ.ஆ. பதினாறாம் நூற்றாண்டு வரையில் நடுகற்களில் சைவச் சமய வழிபாட்டுத் தாக்கங்கள், குறிப்பாக கபாலிக, காளாமுக, வீரசைவ வழிபாட்டு தாக்கங்கள் அமைந்திருப்பதை தென்னிந்திய நடுகல் கல்வெட்டுகள், சிற்பங்கள் கொண்டு காலவாரியாக இக்கட்டுரை ஆராய்ந்து நிறுவுகிறது.

**படங்கள்**



கருங்காலிபாடிப்பட்டி



மல்லிகாபுரம்



©2023 by KRISHMA PUBLICATION



சிகாரிபுரா

**அடிக் குறிப்புகள்**


1. நடுகல் கல்வெட்டுகளும் சிற்பங்களும் தொகுதி – 1 - ச.கிருஷ்ணமூர்த்தி.
2. *A.R.E 1911, insc.no 357, 352, 360.*
3. *The Kapalikas and Kalamukhas: Two lost saivaite sects by David N. Lorenzen, p.165.*
4. தமிழக நடுகல் மரபு கண்காட்சிக் கையேடு, ப.60
5. தென்னிந்திய வீரக்கற்கள் - முனைவர் வெ. கேசவராஜ், ப. 41.
6. தமிழக நடுகல் மரபு கண்காட்சிக் கையேடு, ப.90
7. *ibid,* ப.82.
8. *Unique 13th-century Hoysala hero stone found in Karnataka, The New Indian Express dated 26/01/2023.*
9. *Vijayanagara Empire: Role of the Women in Shaping Its History - A Critical Study in the Economic Sphere by N.V.Madhav, Dr.E.V.Padmaja, IJIRT | Volume 10 Issue 1 (Jun 2023).*
10. தேனி மாவட்ட நடுகற்கள் - முனைவர் சி.மாணிக்கராஜ் , ப.317.
11. *The Hero Stones of Kikali by kevinstandagehotography (2019).*


*****